சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# தரம் - 13 கணக்கீடு – 33

# Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி - 4

**தேர்ச்சி – 13 : நிதி விகிதங்கள் மூலம் நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்து வியாக்கியானப்படுத்தி முகாமைத் தீர்மானங்களுக்குத் தேவையான தகவல்களை முன்வைப்பார்.**

வாரம் - 4 தயாரிப்பு : **சஜித்.sp**

**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி** **BBA(Financial Spl), University of Colombo**

1) வரையறுத்த சுதர்ஷன் பொதுக்கம்பனியின் 31.03.2021 இல் முடிவுற்ற ஆண்டுக்கான தகவல்கள் பின்வருமாறு:

| | ரூ "000" |
|---|---|
| • விற்பனை | 60 000 |
| • விற்பனைக்கிரயம் | 36 000 |
| • தொழிற்பாட்டுச் செலவுகள் | 10 000 |
| • நிதிச் செலவுகள் | 2 000 |
| • மீள்மதிப்பு மிகை – காணி | 4 000 |
| • 31.03.2021 இல் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 36 000 |
| • 31.03.2021 இல் வியாபார வருமதிகள் | 5 000 |
| • 31.03.2021 இல் வியாபார கொடுக்குமதிகள் | 3 000 |

**மேலதிக தகவல்கள்:**

**a)** விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் யாவும் கடனுக்கே இடம்பெற்றது.
**b)** கம்பனி நடப்பாண்டில் ரூ. 3 600 000 ஐ பங்கிலாபமாக செலுத்தியது.
**c)** 31.03.2021 இல் உள்ள சாதாரண பங்கொன்றின் நிறையளித்த சாரசரி விலை ரூ. 15
**d)** கம்பனியானது வரி விடுமுறை காலத்தில் செயற்படுகின்றது.

**வேண்டப்படுவது :**

**01.** மொத்த இலாப வீதம்
**02.** விற்பனைக்கு இலாபம்
**03.** வியாபார வருமதிகள் பணம் சேகரிக்கும் காலம் ( மாதங்களில் )
**04.** பங்கொன்றுக்கான உழைப்பு
**05.** பங்கொன்றுக்கான பங்கிலாபம்

2) பின்வருவன தொலைபேசி உற்பத்தி கைத்தொழிலில் ஈடுபடும் **நான்கு கம்பனிகளின்** தொடர்பானவையாகும்.

| **விகிதம்** | Apple | Samsung | Huwaii | Oppo |
|---|---|---|---|---|
| விரைவுச் சொத்து | 1.2 : 1 | 3.5 : 2 | 4 : 3 | 1 : 1 |
| நடப்பு | 3.1 : 1 | 5 : 2 | 7 : 2 | 5 : 2.5 |
| சரக்கிருப்பு புரள்வு (தடவைகளில்) | 7 | 10 | 12 | 9.5 |
| கடன்படடோர் புரள்வு (தடவைகளில்) | 6.1 | 8.2 | 9.3 | 10 |
| உரிமைக்குக் கடன் | 0.6 | 1 | 0.85 | 0.9 |
| மொத்த சொத்து மீதான வருவாய் | 13.5% | 11.25% | 8.7% | 6.51% |
| பங்கொன்றிற்கான பங்குஇலாபம் ரூ. | 65 | 82 | 49 | 35.80 |
| வட்டிக்காப்பு (தடவைகளில்) | 12 | 14 | 14.5 | 11.5 |

**வேண்டப்படுவது :**
பின்வரும் ஒவ்வொரு நிலைமைகளுக்கான பொருத்தமான கம்பனியினை அடையாளம் கண்டு பொருத்தமான கணக்கீட்டு விகிதத்தினையும் குறிப்பிடுக.

**01.** உயர்வான வட்டி செலுத்தக்கூடிய இயலுமையினை கொண்ட கம்பனி
**02.** அதிக்கூடிய இணைப்பினை கொண்ட கம்பனி
**03.** உயர்ந்த திரவத்தன்மையினை கொண்ட கம்பனி
**04.** சரக்கிருப்பினை செயற்றிறனாக பயன்படுத்தும் கம்பனி
**05.** முதலீட்டின் மீது அதிக வருவாயை உழைக்கும் கம்பனி
**06.** சாதாரண பங்கொன்றிற்கு உயர்ந்த திரும்பலை வழங்கும் கம்பனி
**07.** வாடிக்கையாளரிடமிருந்து பணத்தினை விரைவாக மிகவும் வினைத்திறனாக சேகரிக்கும் கம்பனி
**08.** குறைந்தளவிலான தொழிற்படு மூலதன விகிதத்தை கொண்ட கம்பனி
**09.** இருப்பு பேணும் கிரயத்தினை குறைவாக கொண்ட கம்பனி
**10.** குறுங்கால நிதிநிலைமையினை சிறப்பாக கொண்ட கம்பனி

**3)** 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான **கோல்ட்** கம்பனியில் கணிக்கப்பட்ட நிதி விகதங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ✓ வட்டிக் காப்பு விகிதம் | 3 தடவைகள் |
| ✓ கடன் மூலதனத்திற்கும் உரிமைக்குமிடையிலான விகிதம் | 0.6 : 1 |
| ✓ கடன் சேகரிப்பு காலம் | 1.33 மாதம் |
| ✓ மொத்த சொத்து மீதான திரும்பல் விகிதம் | 0.16 : 1 |
| ✓ இலாப விகிதம் | 12% |

2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான **சில்வர்** கம்பனியின் தரவுகள் வருமாறு:

| | **ரூபா "பில்லியன்"** |
|---|---|
| ✓ நடைமுறைச் சொத்துக்கள் | 0.1 |
| ✓ மொத்தச் சொத்துக்கள் | 1.2 |
| ✓ 10% வங்கிக்கடன் | 0.6 |
| ✓ சராசரி வியாபார வருமதிகள் | 0.2 |
| ✓ மொத்த இலாபம் | 0.4 |
| ✓ செலவுகள் | 0.22 |

- சில்வர் கம்பனியினால் கணிக்கப்பட்ட மொத்தஇலாப வீதம் 25% ஆகும்.
- அனைத்து விற்பனைகளும் கடனுக்கே செய்யப்பட்டது.
- வருடத்தில் 360 வேலை நாட்கள் உள்ளதென கருதுக.
- வருமானவரியினை புறக்கணிக்க.

**வேண்டப்படுவது:**
**1. சில்வர்** கம்பனியின் பின்வரும் நிதிவிகிதங்களைக் கணிக்க.
**01.** இலாப விகிதம்
**02.** கடன் சேகரிப்பு காலம்
**03.** மொத்த சொத்து மீதான திரும்பல் விகிதம்
**04.** வட்டிக் காப்பு விகிதம்
**05.** கடன் மூலதனத்திற்கும் உரிமைக்குமிடையிலான விகிதம்

**2. கோல்ட், சில்வர்** கம்பனிகளின் நிதிவிகிதங்களின் அடிப்படையில் பின்வருவனவற்றை காரணங்களுடன் குறிப்பிடுக.
**01.** நீண்டகால கடன்களுக்கு உயர்ந்தளவிலான பாதுகாப்பை அளிக்கும் கம்பனி
**02.** அதிக திரவத்தன்மையினை உடைய கம்பனி
**03.** இலாபத்தன்மையில் சிறந்த நிலையை கொண்டுள்ள கம்பனி
**04.** ஆகக்கூடுதலான கடன்மூலதனத்தினை பயன்படுத்தும் கம்பனி
**05.** உத்தேச நட்டங்களுக்கு அதிக வாய்ப்பு உள்ள கம்பனி